THE SUDAR OLI

# சுடர் ஒளி

Registered as Newspaper

26.03.2020 வியாழக்கிழமை தொடர்புக்கு 077 361 5555

**24 மணிநேரத்தில் 0**

கொழும்பு, மார்ச் 26
நாட்டை அச்சுறுத்தி, மக்களின் இயல்பு வாழ்க்கையை பெரிதும் பாதித்துள்ள கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து நேற்று முன்தினம் 24 ஆம் திகதி மாலை பெண்ணொருவர் குணமடைந்து வெளியேறியுள்ளார். இந்த நிலையில், கடந்த 24 மணி நேரத்தில் (இன்று காலை 26.03.2020 ) எந்த கொரோனா தொற்றாளரும் அடையாளம் காணப்படவில்லை என சுகாதார அமைச்சு தகவல் வெளியிட்டுள்ளது. (ஒ,5)

# யாழில் நாளையும் ஊரடங்கு நீங்காது!

## மறு அறிவித்தல் வரை திடீர் நீடிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 26
வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் நடைமுறையிலிருந்த ஊரடங்குச் சட்டம் நாளை வெள்ளிக்கிழமை காலை 6 மணிக்கு நீக்கப்படவிருந்தது. எனினும், தற்போதைய நிலைமையைக் கருத்தில்கொண்டு யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கு மட்டும் மறு அறிவித்தல் வரை ஊரடங்குச் சட்டத்தை அரசு திடீரென நீடித்துள்ளது. 2

## பிராந்திய ரீதியில் ஊரடங்கு தளர்வு

### மாவட்டச் செயலகத்தால் ஆலோசனை முன்வைப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 26
கொழும்பு, கம்பஹா, களுத்துறை மாவட்டங்களைப் போன்று யாழ்ப்பாணத்திலும் ஊரடங்கு நீடிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் யாழ்ப்பாணத்தில் ஒவ்வொரு பிராந்தியத்திலும் வெவ்வேறு நேரங்களில் ஊரடங்கை நீக்குவது தொடர்பில் 2

## வங்கிகள் திறக்கவில்லை!

கொழும்பு, மார்ச் 26
வங்கிச் சேவை அவசர சேவையாக அரசு அறிவித்திருந்த போதிலும் வடக்கு மாகாணத்தில் அரச மற்றும் தனியார் வங்கிகள் இன்று திறக்கப்படவில்லை. அவசர சேவையாக வங்கிச் சேவையையும் அறிவித்தமை தொடர்பான சுற்றறிக்கை வெளிவராமையே இதற்குக் காரணம் என்று கூறப் 2

## நாடாளுமன்றைக் கூட்டும் எந்தத் தீர்மானமுமில்லை!

### அரசு திட்டவட்டம்



கொழும்பு, மார்ச் 26
கொரொனா வைரஸ் தொற்று நோய் பரவலால் நாடு முடக்கப்பட்டுள்ள நிலையில், நாடாளுமன்றத்தைக் கூட்ட எந்தத் தீர்மானமும் இல்லை என்று அரசு அறிவித்துள்ளது. 2



மிருசுவில் எண்மர் கொலை

## 4 வயது சிறுமிக்கு கொரோனா?

சந்தேகத்தில் யாழ். போதனாவில் இன்று காலை சேர்க்கப்பட்டார்

யாழ்ப்பாணம், மார்ச் 26
கொரோனா நோயாளியின் சகோதரியின் மகளான 4 வயதுச் சிறுமிக்கு கொரோனா தொற்று ஏற்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தில் அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் இன்று காலை சேர்க்கப்பட்டார். 2

## முகக் கவசம் கட்டாயமில்லை; கை கழுவுதலே முக்கியம்

கொழும்பு, மார்ச் 26
கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்துவதற்காக முகக் கவசம் அணிவது கட்டாயமில்லை என்றும் கை கழுவுவதே கட்டாயம் என்றும் பிரதி 2

## அடுத்த வாரங்கள் ஆபத்தானவை!

### எச்சரிக்கின்றது அரசு

கொழும்பு, மார்ச் 26
எதிர்வரும் இரு வாரத்தில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கலாம் என்ற அச்சம் உள்ளது. அதற்காக மருத்துவமனைகள் மற்றும் 2

## சாவுத் தண்டனை விதிக்கப்பட்ட இராணுவக் குற்றவாளி விடுவிப்பு

### நாடு கொரோனா அச்சத்தில் மூழ்கியிருக்க சத்தம் சந்தடியின்றி கோத்தா நடவடிக்கை

கொழும்பு, மார்ச் 26
மிருசுவிலில் எட்டு தமிழர்கள் குரல்வளை அறுக்கப்பட்டு கொலை செய்யப்பட்ட சம்ப வத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட 3

## பஞ்சம் ஏற்படாது

### அரசு கூறுகின்றது

கொழும்பு, மார்ச் 26
இலங்கையில் ஏப்ரல் இறுதி வரை பொருள்களுக்கு எந்த விதத் தட்டுப்பாடும் ஏற்படாது. தேவையானளவு இருப்பு நாட்டில் கைவசம் உள்ளது என்று அமைச்சரவை இணைப் பேச்சாளரும், அமைச்சருமான பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார். 2

## (தொடர்ச்சிகள்)

### யாழில்....

அதற்கமைய கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மற்றும் புத்தளம் ஆகிய மாவட்டங்களில் தற்போது நடைமுறையிலுள்ள ஊரடங்குச் சட்டம் நாளை வெள்ளிக்கிழமை காலை 6 மணிக்குத் தளர்த்தப்பட்டு பிற்பகல் 2 மணிக்கு மீண்டும் நடைமுறைப்படுத்தப்படும். இம்மாவட்டங்களில் மீண்டும் நடைமுறைப்படுத்தப்படும் ஊரடங்குச் சட்டம் எதிர்வரும் 30ஆம் திகதி திங்கட்கிழமை 6 மணிக்கு நீக்கப்பட்டு அன்று பிற்பகல் 2 மணிக்கு மீண்டும் நடைமுறைப்படுத்தப்படும். கொரோனா வைரஸ் பரவலைக் கருத்தில்கொண்டு அதி அபாய வலயங்களாக அரசால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள கொழும்பு, களுத்துறை மற்றும் கம்பஹா மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதைப் போன்று யாழ்ப்பாண மாவட்டத்திலும் ஊரடங்குச் சட்டம் தொடர்ந்தும் நடைமுறையில் இருக்கும். ஏனைய மாவட்டங்களில் இன்று வியாழக்கிழமை காலை 6 மணிக்குத் தளர்த்தப்பட்டுள்ள ஊரடங்குச் சட்டம் நண்பகல் 12 மணிக்கு மீண்டும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

ஊரடங்குக் காலப் பகுதியில் மக்களுக்குத் தேவையான உணவுப் பொருள்கள் மற்றும் ஏனைய பொருள்களை வீடுகளில் இருந்தே கொள்வனவு செய்யக்கூடிய வகையில் தொடர்ச்சியாக வழங்கலை மேற்கொள்ள அரசு சகல ஏற்பாடுகளையும் செய்துள்ளது.

இதேவேளை, ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்படும் நேரங்களில் நாட்டின் அனைத்து மாவட்டங்களுக்கிடையேயும் பயணம் செய்வது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. அவ்வாறே வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை இடத்துக்கு இடம் அழைத்துச் செல்வதும் முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது. (ஒ,5,22)

### 4 வயது....

தாவடியில் கொரோனா நோயாளி ஒருவர் கடந்த ஞாயிற்றுக் கிழமை அடையாளம் காணப்பட்டிருந்தார். அதனையடுத்து தாவடிப் பிரதேசம் முழுமையாக தனிமைப்படுத்தப்பட்டது. ஆயுதம் தாங்கிய இராணுவத்தினர் அந்தப் பகுதியில் நிறுத்தப்பட்டு கண்காணிப்பு முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. கொரோனோ நோயாளியின் வீட்டுக்கு அருகில் வசிக்கும், அவரது சகோதரியின் மகளுக்கு நேற்று மாலை காய்ச்சல் ஏற்பட்டுள்ளது. இன்று காலை அவர் நோயாளர் காவு வண்டிமூலம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். (ஒ,5)

### பிராந்திய....

ஆலோசனை முன்வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது. யாழ்ப்பாணத்தில் நாளை காலை 6 மணிக்கு ஊரடங்குச் சட்டம் நீக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டபோதும், அது மறு அறிவித்தல் வரையில் நீடிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் ஒவ்வொரு பிரதேசங்களிலும் ஒவ்வொரு நேரம் ஊரடங்கை தளர்த்துவதன் ஊடாக மக்கள் கூட்டம் கூடுவதைத் தடுக்க முடியும். எனவே குடாநாட்டில் ஒவ்வொரு இடத்திலும் ஊரடங்கை வெவ்வேறு நேரங்களில் தளர்த்துவது தொடர்பான பரிந்துரை முன்வைக்கப்பட்டுள்ளதாக அறியமுடிகின்றது. (ஒ,5)

### வங்கிகள்....

கூறப்படுகின்றது. ஊரடங்குச் சட்டம் காரணமாக வங்கிகள் மூடப்பட்டுள்ளன. ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்படும் நேரங்களில் வங்கிகளில் மக்கள் பெருமளவு கூடுகின்றனர். இந்த நிலையில் வங்கிச் சேவையை அவசர சேவைக்குள் உள்ளீர்ப்பதாக ஜனாதிபதி கோத்தாபய நேற்று அறிவித்திருந்தார்.

ஆனால் வடக்கு மாகாணத்தில் இன்றைய தினம் வங்கிகள் திறக்கப்படவில்லை. ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ வங்கிச் சேவையை அவசர சேவையாக அறிவித்திருந்தபோதிலும், இது தொடர்பான சுற்றறிக்கை இலங்கை மத்திய வங்கியால் வெளியிடப்படவில்லை என்று கூறப்படுகின்றது. இன்று மதியம் அல்லது நாளை இது தொடர்பான சுற்றறிக்கை கிடைக்கப் பெறும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ஒ,5)

### நாடாளுமன்றைக்....

இன்று நடந்த வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் அமைச்சரவை இணை ஊடகப் பேச்சாளர் பந்துல குணவர்தன இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

கொரோனா வைரஸ் பரவலை கட்டுப்படுத்த தற்போதுவரையில் அரசு முன்னெடுத்து வருகின்ற சுகாதார வேலைத்திட்டங்கள் போதுமான உள்ளது. இறுதியாகக் கூடிய சர்வகட்சி கூட்டத்தில் அர சாங்கம் முன்வைத்த வேலைத்திட்டங்களை எதிர்க்கட்சியினர் அனைவரும் ஏற்றுக்கொண்டனர். அரசியல் பாகுபாடு இல்லாது அனைவரும் அதை ஏற்றுக் கொண்டனர்.

அதேபோல் நாடாளுமன்றத்தை உடனடியாக கூட்ட வேண்டும் என எதிர்க்கட்சி தரப்பினர் கோரிக்கை விடுத்தனர். நாடாளுமன்றத்தை கூட்டுவதற்கு அரசு எந்த தீர்மானமும் எடுக்கவில்லை. நாடாளுமன்றத்தைக் கூட்டி தீர்மானம் எடுக்கும் அளவுக்கு அரசு பலவீனமாக செயற்படவில்லை. இந்த தேசிய இடர் நிலைமைகளை அரசு மிகச் சரியாக கையாண்டு வருகின்றது. தொடர்ந்தும் அதே வேலைத்திட்டங்கள் சரியாக முன்னெடுக்கப்படும். அரசு முன்னெடுக்கும் வேலைத்திட்டங்களுக்கு எதிர்க்கட்சியினரை இணைத்துக்கொள்ளவும் அரசு தயாராக உள்ளது.

கொரோனா வைரஸ் பரவல் உலகளவில் அடர் நிலையாக மாறியுள்ள வேளையில் இதிலிருந்து மீளும் வேலைத்திட்டத்தில் சகல தரப்பையும் இணைத்துக்கொண்டு அவர்களின் கருத்துக் காரணிகளை கேட்டு பொதுவான வேலைத் திட்டம் ஒன்றை உருவாக்குவதில் அரசு இணக்கம் தெரிவித்துள்ளது. அதற்கமைய அனைவரும் இணைந்து செயற்பட முடியும்.-என்றார். (எ)

### முகக்கவசம்...

பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார். இது தொடர்பில் பொலிஸாரிடையே ஆரம்பத்தில் தெளிவின்மை காணப்பட்டதாகக் கூறிய அவர் இப்போது எல்லா பொலிஸாருக்கும் இது பற்றி அறிவிக்கப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டார்.

“முகக் கவசம் அணிவது அவரவர் விருப்பம். ஆனால்,கை கழுவுவதும் தனிமைப்படுத்தலுமே கட்டாயம். இந்தச் செயற்பாடுகள்தான் கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்தும். சிறப்பு மருத்துவர்களின் கருத்தும் இதுவே” என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (ஒ,5)

### அடுத்த வாரங்கள்..

தனிமைப்படுத்தல் முகாம்கள் மேலதிகமாக ஒதுக்கப்பட்டுள்ளன என்று அரசு தெரிவித்துள்ளது.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்தச் செய்தியாளர் சந்திப்பு இன்று வியாழக்கிழமை அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது. அதில் கருத்துத் தெரிவித்த அமைச்சரவை இணைப் பேச்சாளர் அமைச்சர் ரமேஷ் பத்திரண இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

நாட்டின் அடுத்த இரு வாரங்கள் சவால் நிறைந்த காலமாகவே நாம் கருதுகின்றோம். இந்த இரு வார காலத்தில் மக்கள் மிக அவதானமாகச் செயற்பட வேண்டும். முடிந்தளவு தனிப்பட்ட முறையில் மக்கள் தம்மைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். வீடுகளுக்குள் பாதுகாப்பாக இருப்பதே இவ்வாறான சூழலில் மக்கள் தம்மைப் பாதுகாக்க எடுக்கக்கூடிய சிறந்த முடிவாகும்.

சுகாதார துறையினர் எந்தவித தடைகளும் இல்லாது தமது சேவையை முன்னெடுக்க சுகாதார சேவையாளர்களுக்கு இடமளிக்க வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை அரசு அவர்களுக்குச் செய்து கொடுத்துள்ளது. மக்களின் பங்களிப்பும் அதில் அவசியம்.

அடுத்த இரண்டு வாரகாலத்தில் கொரோனா தொற்றாளர்கள் அதிகரிக்க வாய்ப்புகள் இருப்பதாக கருதுவதால் இப்போதே மருத்துவமனைகள் தயார்ப்படுத்தப்பட்டுள்ளன. நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் நிலையில் அவர்களை சிரமப்படுத்தாத வகையில் அவர்களுக்கான மருத்துவ வசதிகளை செய்து கொடுக்க வேண்டிய ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. அதேபோல் தனிமைப்படுத்தல் மத்திய நிலையங்களும் தயார்ப்படுத்தப்பட்டுள்ளது. மக்கள் எந்த விதத்திலும் அச்சம் கொள்ளத்தேவையில்லை. சுகாதார பணிப்பகம் மற்றும் அரசாங்கம் கூறும் ஆலோசனைகளை பின்பற்றி தம்மை பாதுகாப்பாக வைத்திருக்கும் நிலையில் வெகு விரைவில் நாட்டை எம்மால் இந்த சவால்களில் இருந்து விடுவித்துக்கொள்ள முடியும். அதற்காக சகலரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். என்றார். (எ)

### பஞ்சம்...

இன்று வியாழக்கிழமை நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

21 நாள்களுக்கு இந்தியா முழுவதும் முடக்கப்பட்டுள்ளது. அங்கிருந்துதான் இலங்கைக்கு பெருமளவு பொருள்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன. அதனால் நாட்டில் பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்படுமா? என்று ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது வழமையாக தமிழ், சிங்கள புத்தாண்டு வரும் வேளையில் முன்கூட்டியே பொருள்களை கைவசம் வைத்திருப்பதுதான் வியாபாரத் தந்திரமாக பின்பற்றப்பட்டு வருகின்றது. இந்த முறையும் அவ்வாறு நடந்துள்ளது. ஏப்ரல் இறுதிவரை அத்தியாவசியப் பொருள்கள் உட்பட இதர இறக்குமதிப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு நிலவாது. பருப்பு உட்பட சில பொருள்களை இலங்கையில் உற்பத்தி செய்யமுடியாது. உள்நாட்டில் குறுகிய காலத்துக்குள் உற்பத்தி செய்யக்கூடிய பொருள்களை உற்பத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்காகவே பஸில் ராஜபக்ச தலைமையில் குழு அமைக்கப்பட்டுள்ளது. உள்நாட்டு உற்பத்தியை மேம்படுத்துவதே எமது திட்டம். கடந்தகாலத்தில் இது குழப்பியடிக்கப்பட்டது. எனினும் நாம் மீண்டும் கட்டியழுப்புவோம்- என்றார். (எ-44)

**சாவுத் தண்டனை....**

சார்ஜென்ட் சுனில் ரத்நாயக்காவுக்கு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ பொதுமன்னிப்பு வழங்கி விடுதலை செய்துள்ளார்.

**நடந்தது என்ன?**

போர் காரணமாக மிருசுவிலிருந்து இடம்பெயர்ந்து கரவெட்டி நாவலர்மடம் பகுதியில் வசித்து வந்த, ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் உள்ளிட்ட 9 பேர், தமது சொந்த வீடுகளைப் பார்ப்பதற்கு 2000 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 19ஆம் திகதி புறப்பட்டனர். மிருசுவில் வடக்கு படித்த மகளிர் குடியேற்றத் திட்டப் பகுதியில் அமைந்திருந்த அவர்களது வீடுகளைப் பார்ப்பதற்குச் சென்ற 9 பேரும் அன்றைய தினம் மீண்டும் திரும்பி வரவில்லை. மறு நாள் 20 ஆம் திகதி மாலை, வீடு பார்க்கச் சென்ற 9 பேரில் ஒருவர் மாத்திரம் அடிகாயங்களுடன் மந்திகை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார். அவர் வழங்கிய சாட்சியத்தில், தமது வீடுகளைப் பார்த்துக் கொண்டிருந்த வேளை அங்கு வந்த இராணுவத்தினர், தான் உள்ளடங்கலாக ஒன்பது பேரையும் கைது செய்து அழைத்துச் சென்றனர். கண்களைக் கட்டி கடுமையாகத் தாக்கினர். இதன் போது காயங்களுடன் தான் தப்பித்து வந்ததாகத் தெரிவித்திருந்தார்.

டிசெம்பர் மாதம் 25 ஆம் திகதி, அவர் தெரிவித்த குறிப்புக்கு அமைய மிருசுவில் வடக்கு படித்த மகளிர் குடியேற்றத் திட்டப் பகுதியிலுள்ள தென்னங் காணியில், புதிதாக வெட்டப் பட்ட குழியிலிருந்து காணாமற் போயிருந்த எட்டுப் பேரினதும் சடலங்கள் மீட்கப்பட்டன. அப்போதைய சாவகச்சேரி மாவட்ட நீதிவான் ஹ அ.பிரேமசங்கர் முன்னிலையில் குறித்த குழி தோண்டப்பட்டது. எட்டுச் சடலங்களும் ஒன்றன் மேல் ஒன்று போடப்பட்டு புதைக்கப்பட்டிருந்தன. மணல் பாங்கான தரையில் புதைக்கப்பட்டிருந்தமையினால், சடலங்கள் பழுதடையாத நிலையில் மீட்கப்பட்டிருந்தன. மீட்கப் பட்ட சடலங்களில் கைகள் பின்னால் கட்டப்பட்டிருந்தன. கழுத்து, கைகளில் வெட்டுக் காயம் என்பன காணப்பட்டன. எட்டுப் பேரினதும் குரல் வளை அறுக்கப்பட்டே கொலை செய் யப்பட்டனர் என்பது உடற்கூற்றுப் பரிசோதனையில் வெளிச்சத்துக்கு வந்தது. அத்துடன் 5 வயது சிறுவனது வலது கால் திருகி முறிக்கப்பட்டிருந்ததும், உடற் கூற்றுப் பரிசோதனையில் தெரிய வந்தது.

**கைது**

இதனையடுத்து விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன. இதன் போது இராணுவத்தின் சார்ஜன்ட் தரத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் உள்ளிட்ட எட்டு இராணுவத்தினர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டனர். இந்த வழக்கு மிக நீண்ட காலமாக இடம் பெற்று வந்தது. 2015ஆம் ஆண்டு ஜூன் மாதம் 25 ஆம் திகதி கொழும்பு உயர் நீதிமன்றம் வழக்கின் தீர்ப்பை வழங்கியது. இதன்போது இராணுவ சார்ஜென்ட் சுனில் ரத்நாயக்கவுக்கு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது.

இதற்கு எதிராக பல்வேறு போராட்டங்கள் நடத்தப்பட்டிருந்தன. சுனில் ரத்நாயக்கவை விடுவிக்க வேண்டும் என்று பல தரப்புக்களிலிருந்தும் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டிருந்தன. இந்த நிலையில் சுனில் ரத்நாயக்க ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவால் பொதுமன்னிப்பு வழங்கி விடுவிக்கப்பட்டு, வீடு சென்றுள்ளார்.

இந்தத் தகவலை அரச ஊடகங்கள் இன்று வெளியிட்டன.நாடு முழுவதும் கொரோனா வைரஸ் அச்சத்தில் மூழ்கியுள்ளது. நாடு முழுவதும் பிறப்பிக்கப்பட்டுள்ள ஊரடங்கு காரணமாக மக்கள் முடங்கியுள்ளனர். இவ்வாறான தொரு வேளையில் சுனில் ரத் நாயக்கா ஜனாதிபதியால் பொது மன்னிப்பு வழங்கி விடுவிக்கப் பட்டுள்ளார். (ஒ,5)

## இலாப நோக்கம் வேண்டாம்
# சேவை நோக்குடன் செயற்படுங்கள்
## யாழ். மாவட்டச் செயலர் உருக்கமான கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 26

தற்போதுள்ள இடர் நிலைமையில் இலாப நோக்கத்துடன் செயற்பட வேண்டாம். சேவை மனப் பாங்குடன் செயற்படுங்கள். இவ்வாறு யாழ்ப் பாண மாவட்டச் செயலர் கணபதிப்பிள்ளை மகேசன் உருக்கமான வேண்டுகோளை முன்வைத்துள்ளார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் பிறப்பிக்கப்பட்டுள்ள ஊரடங்கு காரணமாக பேக்கரி உற்பத்திப் பொருள்கள் நடமாடும் சேவை ஊடாக விநியோகிக்கப்பட்டு வருகின்றன. ஒரு இறாத்தல் பாண் 65 ரூபா வரையில் விற்பனை செய்யப்படுவதாக பொதுமக்களால் முறைப்பாடு மேற்கொள்ளப்படுகின்றது. சில இடங்களில் இந்த நிலைமை காணப் படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. சில இடங்களில் 60 ரூபாவுக்கு பாண் விற்பனை செய்யப்படுகின்றது. 58 ரூபாவுக்கே பாண் விற்பனை செய்யப் பட வேண்டும் என்றபோதும், அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுகின்றது. இது தொடர்பில் மாவட்டச் செயலரிடம் கேட்டபோது, எனக்கும் முறைப்பாடு கிடைக்கப் பெற்றது. இவ்வாறான இடர் நிலைமைகளில் இலாப நோக்கத்துடன் செயற்படக் கூடாது. சேவை நோக்கத்துடன் செயற்பட வேண்டும்- என்றார். (ஒ,5)

## ஊரடங்கு வேளையில்
# சிறுவர் துஷ்பிரயோகம் 33 வீதத்தால் அதிகரிப்பு

கொழும்பு,மார்ச் 26

நாடளாவிய ரீதியில் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து, சிறுவர் துஷ்பிரயோகச் சம்பவங்கள் தொடர்பான முறைப்பாடுகள் 33 வீதத்தால் அதிகரித்துள்ளன என்று தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் பேராசிரியர் முதித விதானபதிரண தெரிவித்தார்.

எனினும் இந்த முறைப்பாடுகளில் பாலியல் ரீதியான முறைப்பாடுகள் பதிவாகவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஊரடங்குச்சட்டம் அமுலில் உள்ள காரணத்தால், வன்முறையைப் பிரயோகிக்கும் நபரும், பாதிக்கப்படும் சிறுவரும் வீட்டுக்குள் முடங்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருப்பதே இதற்குக் காரணமாகும். நாட்டில் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத் தப்பட்ட பின்னர் சிறுவர்களுடன் சம்பந்தப் பட்ட சம்பவங்கள் தொடர்பில் நாளாந்தம் சுமார் 40 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றன. அவற்றில் 10 சத வீதமானவை சிறுவர் துஷ்பிரயோகங்களுடன் தொடர்பு பட்டவை.

ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டதன் பின்னரான 7 நாள்களில் சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு 111 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. அவற்றில் 36 முறைப்பாடுகள் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான முறைபாடுகளாகும்.

எனவே ஊரடங்குச் சட்டம் அமுலிலுள்ள காலப்பகுதியில் சிறார்களைப் பொறுப்புடனும், பாதுகாப்பாகவும் கவனித்துக் கொள்ளும் பொறுப்பு பெற்றோருக்கு உள்ளது. தற்போது சிறுவர்கள் வீடுகளுக்குள் முடங்கிப் போய் உள்ள நிலையில் அவர்களது மனநிலை குறித்த புரிதலைப் பெரியோர் வளர்த்துக் கொள்ள வேண்டியது அவசியமாகும்.

சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பில் எமக்குக் கிடைக்கப் பெறும் முறைப்பாடுகள் தொடர்பில் ஆராய்ந்து, நாம் உரிய சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வோம்- என் றார். (க)

## நிலத்தில் ஊற்றப்படும் கள்

யாழ்ப்பாணம்,மார்ச் 26

ஊரடங்குச் சட்ட நடைமுறையால், யாழ். குடாநாட்டில் சீவல் தொழிலாளர்களால் பெறப்படும் கள், நிலத்தில் ஊற்றப்பட்டு வருகின்றது.

எனவே கள்ளைப் போத்தலில் அடைப்பதற்கும், வடிசாலைத் தொழிற்சாலையில் பதப்படுத்தவும் அரசாங்கம் அனுமதிக்க வேண்டும் என்று பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியின் தலைவர் எஸ்.செல்வராசா கோரிக்கை விடுத்துள்ளார். பனை, தென்னை மரங்களில் நாளாந்தம் தொழிலாளர்களால் கள் பெறப்பட்டு வருகிறது. நாளாந்தம் கள் பெறப்படாவிட்டால், சீவல் மரங்கள் பாதிக்கப்படும் என்பதால் அவர்கள் தொழிலைக் கைவிடவில்லை. எனவே வீணாக நிலத்தில் ஊற்றப்படும் கள்ளைப் போத்தலில் அடைப்பதற்கும் மற்றும் வலிகாமம் கொத்தணியில் வடிசாலைத் தொழிற்சாலைக்குப் பயன்படுத்தவும் அனுமதியளிக்க வேண்டும் என்று அரசாங்கத்திடம் அவசர கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (க-17)

## துப்பாக்கி இருக்கும் இடத்தில்....!

பொலிஸ் உத்தியோகத்தர்களின் இடுப்புப் பட்டியில் உள்ள கைத்துப்பாக்கி உறையில் கைத்துப்பாக்கி இருப்பதே வழமை.

அம்பலாங்கொடவில் பாதுகாப்புப் பணியில் இருந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரின் கைத்துப்பாக்கி உறையில் கை சுத்திகரிப்புத் திரவப் போத்தல் காணப்பட்டது. தற்போது நாட்டில் கொரோனா தொற்று அதிகரித்துள்ள நிலையில் அடிக்கடி கைகளைச் சுத்தப்படுத்திக் கொள்வது அவசியமானது.



## ஊரடங்குச் சட்டத்தால்

# மன்னாரில் மட்டும் 17,066 குடும்பங்கள் பாதிப்பு

### மாவட்டச் செயலர் தெரிவிப்பு

மன்னார்,மார்ச் 26

நாட்டில் ஊரடங்கு சட்டம் அமுலில் உள்ளதால் மன்னார் மாவட்டத்தில் மட்டும் 17 ஆயிரத்து 66 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு மன்னார் மாவட்டச் செயலர் சி.ஏ.மோகன்றாஸ் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

“கொரோனா வைரஸ் தொற்று காரணமாக கடந்த 20ஆம் திகதி தொடக்கம் ஊரடங்கு சட்டம் நாடு முழுவதும் அறிவிக்கப்பட்டது.

இதனால் மன்னார் மாவட்டத்தில் இது வரை காலப்பகுதியில் 17 ஆயிரத்து 66 குடும்பங்களும் 52 ஆயிரத்து 869 தனி நபர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதில் மன்னார், மடு, நானாட்டான், மாந்தை மேற்கு, முசலி போன்ற பிரதேச செயலகப் பிரிவுகளில் உள்ள நாளாந்தம் கூலி வேலை செய்பவர்கள், பெண் தலைமைத்துவ குடும்பங்களை கொண்டவர்கள் மற்றும் வறுமைக் கோட்டுக்கு உட்பட்டவர்களும் அடங்குவர்.

இவ்வாறு பாதிக்கப்பட்டவர்களுக்கு பகிர்ந்தளிப்பதற்கு இன்று முதல் கட்டமாக 6 ஆயிரத்து 500 கிலோ கோதுமை மா கிடைக்கப்பெற்றுள்ளது.

அவற்றை பிரதேச செயலகங்கள் ஊடாக பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன”- என்றார். (ஐ-213)

## கொரோனா தொற்றாளிகளில்

# இன்னும் நால்வர் நலமடைந்தனர்!

கொழும்பு, மார்ச் 26

கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டு அங்கொடை தொற்று நோய் தடுப்பு மருத்துவமனையில் சிகிச்சைபெற்று வரும் நான்கு தொற்றாளர்கள் குணமடைந்துள்ளனர். அவர்கள் தொடர்பில் தமது நிறுவனம் முன்னெடுத்த ஆய்வுகளில் இது தெரியவந்துள்ளதாக, பொரளை மருத்துவ ஆய்வுகூடத்தின் பணிப்பாளர் மருத்துவர் ஜயருக் பண்டார தெரிவித்தார்.

ஏற்கனவே சுகமடைந்து வெளியேறிய மூவருக்கு மேலதிகமாக இந்த நால்வரின் மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டுள்ளதில் அவர்கள் குணமடைந்திருப்பது தெரியவந்ததாகவும், மருத்துவ நிபுணர்கள் பரிந்துரைப்பார்களாயின் அவர்கள் மருத்துவமனையிலிருந்து வெளியேறி வீடு செல்ல முடியுமான சூழல் ஏற்படும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

முன்னதாக இலங்கையில் முதலில் அடையாளம் காணப்பட்ட சீனப் பெண் கடந்த பெப்ரவரி மாதம் 19ஆம் திகதி சுகமடைந்து வீடு திரும்பியிருந்தார். பின்னர் கடந்த 23 ஆம் திகதி 2 ஆவது கொரோனா தொற்றாளரான மத்தேகொடையைச் சேர்ந்த சுற்றுலா வழிகாட்டி குணமடைந்து வெளியேறினார். நேற்று முன்தினம் மாலை 11 ஆவது கொரோனா தொற்றாளராக பதிவான 23 வயதுடைய இளம்பெண், இலங்கையில் குணமடைந்த 3 ஆவது கொரோனா தொற்றாளராக மருத்துவமனையிலிருந்து வீடு திரும்பினார்.

இந்த நிலையிலேயே மேலும் நால்வரின் பரிசோதனை அறிக்கையில் அவர்கள் குணமடைந் துள்ளனர் எனத் தெரியவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ,5)

# ஊரடங்கு வேளையிலும் மீன் விற்பதற்கு அனுமதி

முல்லைத்தீவு,மார்ச் 26

ஊரடங்குச் சட்டம் அமுலில் உள்ள போதும், மீன் வியாபாரிகளின் வியாபார நடவடிக்கைக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக நாடளாவிய ரீதியில் அமுல்படுத்தப்பட்டுள்ள ஊரடங்குச் சட்டம் காரணமாக ஆழ்கடலில் இருந்து பிடித்து வரப்படுகின்ற கடலுணவுகளை இறக்குவதற்கும் அவற்றை ஏனைய இடங்களுக்கு எடுத்துச் செல்வதற்கும் தொழிலாளர்கள் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

இதன் காரணமாக பெருந்தொகையான நட்டத்தை எதிர்கொள்ளும் நிலைமை ஏற்பட்டுள்ளது. இதனையடுத்து முல்லைத்தீவு மாவட்ட கடற்தொழில் சம்மேளத்தின் முயற்சியில், சிறு வியாபாரிகள் கடற்றொழிலாளர் சம்மேளனத்தின் கடிதம் மூலம் வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஆழ்கடலில் இருந்து கொண்டு வரப்படும் மீன்களை அடுத்தடுத்த கட்டங்களுக்கு நகர்த்தும் செயற்பாடுகளை தினசரி காலை 6 மணியிலிருந்து மாலை 6 மணி வரை (ஊரடங்கு சட்டம் அமுலில் இருந்தாலும்) மேற்கொள்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருக்கும் நேரத்திலும் கடற்றொழிலாளர்கள் நாடளாவிய ரீதியில் தொழிலில் ஈடுபடவும், அதேபோன்று கடற்றொழில் சார் அடையாளத்தை உறுதிப்படுத்துபவர்கள் ஊரடங்குச் சட்டம் அமுலில் உள்ள வேளையிலும் தொழில்சார் போக்குவரத்தில் ஈடுபடவும் அனுமதிக்கப்பட்டுள்ளது என்று முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் சம்மேளத்தின் தலைவர் தெரிவித்துள்ளார். (சு-19)





# உலருணவு வழங்கல்

யாழ்ப்பாணம், மார்ச் 26

கொழும்புத்துறையில் உள்ள பெண்கள் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு யாழ்.மாநகர சபையின் பிரதி மேயர் துரைராஜா ஈசனினால் உலர்உணவுப் பொதிகள் இன்று வழங்கி வைக்கப்பட்டன. (23)

# பாதிக்கப்பட்டோருக்கு உலர்உணவுப்பொதிகள்

ஏழாலை,மார்ச் 26

மல்லாகம் கோட்டைக்காடு பகுதியில் பொருளாதார நிலையில் பின்தங்கிய குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

மல்லாகம் கோட்டைக்காடு சைவ வாலிபர் சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் சுவிஸ் வாழ் மக்களின் நிதிப்பங்களிப்புடன், வலி.தெற்கு பிரதேச சபையின் 2 ஆம் வட்டார பிரதேச சபை உறுப்பினர் சி.லகிந்தனின் அனுசரணையுடன் இவ் உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. (ஐ-39)



முன்னாள் எம்பி பாலித தேவரப்பெரும...

# கொரோனா தொற்றினாலும் மக்கள் பணி தொடரும்!

## அஜித் ரோஹன உறுதி

கொழும்பு, மார்ச் 26



கொரோனா வைரஸை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக இறுதிவரை போராடுவேன். கொரோனா தொற்று ஏற்படும் இறுதி நேரம் வரைப் போராடுவேன். இவ்வாறு பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்துவதற்காக நாங்கள் கடுமையாகப் போராடுகிறோம். மக்களின் முழுமையான ஒத்துழைப்பு இருந்தால் மாத்திரமே இதை முழுமையாகக் கட்டுப்படுத்த முடியும்.

மருத்துவத் துறையில் இரண்டாமிடத்தில் உள்ள இத்தாலிதான் இன்று கொரோனாவால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளது. அந்த நாடு செய்வதறியாமல் தடுமாறுகிறது. மக்களின் அஜாக்கிரதையே இதற்குக் காரணம். அந்த மக்கள் இதில் கூடுதல் கவனம் செலுத்தி சுய தனிமைப்படுத்தலை மேற்கொண்டிருந்தால் இவ்வளவு சேதம் நிகழ்ந்திருக்காது.

இதை உதாரணமாகக் கொண்டு நாம் செயற்பட வேண்டும். மருத்துவத் துறையில் இரண்டாமிடத்தில் உள்ள இத்தாலிக்கே இந்த நிலை என்றால் எமக்கு என்ன நிலை ஏற்படும் என்று நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். தனிமைப்படுத்தலே ஒரே வழி. இந்த ஊரடங்கை நாம் பிறப்பிப்பதே இதற்காகத்தான். ஊரடங்கு தற்காலிகமாக நீக்கப்படுவது உணவு மற்றும் மருந்துப் பொருள்களைக் கொள்வனவு செய்வதற்கு மாத்திரம்தான்.

குடும்பங்களது வீடுகளுக்குச் செல்வதற்கோ நண்பர்களுடன் சுற்றுவதற்கோ அல்ல. அப்படிச் செய்தால் இந்த ஊரடங்கு பிறப்பித்ததில் அர்த்தம் இல்லாமல் போய்விடும். இந்த வைரஸைக் கட்டுப்படுத்தும் வரை நாம் ஓய மாட்டோம். நான் இதில் தீவிரமாக இருக்கிறேன். எனக்கு கொரோனா தொற்றும்வரை கடமையாற்றுவேன் - என்றார். (ஒ,5)

# 'ஒன்லைன்' விற்பனை பேராசையால் ஆப்பு!

கொழும்பு, மார்ச் 26

கொழும்பில் பிரபலமான இணையம் மூலமான விற்பனை நிறுவனம் ஒன்றின் மீது அதிக விலைக்குப் பொருள்களை விற்பனை செய்தமைக்காக வழக்குப் பதிவு செய்யப்படவுள்ளது என்று நுகர்வோர் அதிகார சபையினர் தெரிவித்தனர்.

இந்த நிறுவனத்தில் இணையம் மூலம் பொருள்களை முன்பதிவு செய்தால் வீட்டுக்கு அவற்றை வழங்குவார்கள். தற்போது நாட்டில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் அதிக விலைக்கு இந்த நிறுவனம் பொருள்களை விற்பனை செய்கின்றது என்று பொதுமக்கள் நுகர்வோர் அதிகார சபைக்குப் பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. அதையடுத்து நேற்றுப் புதன்கிழமை நுகர்வோர் அதிகார சபையினர் திடீரென அந்த நிறுவனத்துக்குச் சென்று சோதனை மேற்கொண்டுள்ளனர்.

அங்கு நடத்தப்பட்ட சோதனையில் பொருள்கள் அதிக விலைக்கு விற்கப்படுகின்றமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மீன் ரின் ஒன்று 550 ரூபாவுக்கும், பெரிய வெங்காயம் 500 ரூபாவுக்கும், ஒரு கிலோ பருப்பு 180 ரூபாவுக்கும், ஒரு கிலோ மா 150 ரூபாவுக்கும் விற்பனை செய்வது கண்டறியப்பட்டுள்ளது.

அதிக விலை அறவிட்ட வாடிக்கையாளர்களிடம் உடனடியாகப் பணத்தை மீளளிக்குமாறு நுகர்வோர் அதிகார சபை அதிகாரிகள் உத்தரவிட்டதுடன், நிறுவனத்தின் மீது வழக்குத் தாக்கல் செய்யவும் நடவடிக்கை எடுத்துள்ளனர். (எ)

# கிராம சந்தைகளை பயன்படுத்துங்கள்

## தவிசாளர் கோரிக்கை

கொடிகாமம், மார்ச் 26

கொரோனாவிலிருந்து பாதுகாப்பாக இருக்க கிராமங்கள் தோறும் உள்ள சந்தைகளை பயன்படுத்திக்கொள்ளுங்கள் என்று சாவகச்சேரிப் பிரதேச சபைத் தவிசாளர் க.வாமதேவன் தெரிவித்தார்.

பயங்கர தொற்று நோயான கொரோனாவிலிருந்து உங்களுக்கான பாதுகாப்பையும் சமூகத்துக்கான பாதுகாப்பையும் பொறுப்புணர்வுடன் ஏற்படுத்திக் கொள்ளுங்கள். ஊரடங்குச் சட்டம் நீக்கப்படும்போது பொது இடங்களில் கூட்டம் கூடுவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

இதற்கான நடவடிக்கைகளை நாம் எடுத்துள்ளோம். கிராமங்களில் உள்ள சந்தைகளை உற்பத்தியாளர்கள் பயன்படுத்திக் கொள்ளுங்கள், எழுதுமட்டுவாள், மிருசுவில், உசன், வரணி, மந்துவில், கைதடி நுணாவில், கைதடி நாவற்குழி , மேலும் கிராமங்களில் உள்ள பொருத்தமான சந்தைகளை பாவித்துக் கொள்ளுங்கள்.

குறிப்பிட்டளவு முகக்கவசங்கள் எமது உறுப்பினர்கள் மூலம் வழங்கப்படவுள்ளன. இதே வேளை, அத்தியாவசிய தேவையான குடிதண்ணீர் விநியோகம், கழிவு அகற்றல் நடவடிக்கைகள் எம்மால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அவசர தேவைகள் ஏற்படும் நேரத்தில் தவிசாளருடன் 0774737600, உபதவிசாளருடன் 0773581007 என்ற இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள் என்று தவிசாளர் மேலும் தெரிவித்தார். (த-159)



# காரைநகரில் மரக்கறிப் பொதி

யாழ்ப்பாணம், மார்ச் 26

கொரோனாத் தொற்று காரணமாக யாழ்ப்பாணத்தில் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ளமையால், விவசாய திணைக்களத்தின் அனுசரணையுடன் காரை இளம் விவசாயிகள் கழகம் மரக்கறிகள் அடங்கிய பொதியினை காரைநகர் பிரதேச மக்களின் வீடுகளுக்கு நேரடியாக விநியோகம் செய்யவுள்ளார்கள்.

குறித்த மரக்கறிப் பொதிகளில் தக்காளி , வெங்காயம், கறிமிளகாய், மற்றும் மிளகாய் என்பவற்றுடன் மரவள்ளி, வெண்டி, பீற்றூட் என்பனவும் உள்ளடக்கப்பட்டு விநியோகம் செய்யப்படவுள்ளன. (ந)

# தனிமைப்படுத்தப்பட்ட 6 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள்

வவுனியா, மார்ச் 26

வவுனியாவில் தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்களுக்கு நேரடியாகச் சென்று ஊடகவியலாளர்களால் உணவு பொதிகள் வழங்கப்பட்டன. யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற மதபோதகரின் போதனையில் கலந்து கொண்ட வவுனியா, புளியங்குளம் வடக்கு, முத்து மாரிநகர் பகுதியில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள 6 குடும்பங்களைச் சேர்ந்த 19 பேருக்கே இந்த உதவிகள் வழங்கப்பட்டன. (ஐ-18)







# ஊரடங்கிலும் மரக்கறி வியாபாரம்

*யாழ்ப்பாணம், மார்ச் 26*

கொரேனாத் தொற்றையடுத்து ஊரடங்கு அமுல்படுத் தப்பட்டுள்ள நேரத்திலும் இணுவில் கந்தசுவாமி கோவிலின் முன்னால் மரக்கறிகள் வியாபாரம் இடம் பெற்று வருகின்றது.

பொன்னாங்காணி, வல்லாரை, கீரை, வாழைக்காய், பச்சைமிளகாய் ,தக்காளி, வெண்டி,கோவா உருளைக் கிழங்கு ஆகிய மரக்கறிகள் இங்கே விற்கப்படுகின்றன. இதேவேளை விவசாயிகள் தமது உற்பத்திப் பொருட் களை நேரடியாக இங்கு கொண்டு வந்து சந்தைப் படுத்த முடியும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ந)

# யாழ்ப்பாணத்திலுள்ள மலையக மாணவர்களுக்கு நிவாரணப்பொதி

*யாழ்ப்பாணம்,மார்ச் 26*

யாழ்ப்பாணத்திலுள்ள மலையக பல்கலைக்கழக மாணவர்களுக்குத் தேவை யான உணவுப் பொருள் கள் அடங்கிய நிவார ணப் பொதியை வழங்கு வதற்கு இ.தொ.கா இளை ஞர் அணிப் பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமான் முன்வந் துள்ளார். 'கொரோனா' வைரஸ் அச்சுறுத்தல் காரணமாக, யாழ்ப்பா ணம் மாவட்டத்துக்கு பொலிஸ் ஊரடங்குச்சட் டம் பிறப்பிக்கப்பட் டுள்ளது. இதனால் யாழ்ப் பாணத்தில் வாடகை இல்லங்களில் தங்கி கல்வி பயிலும் மலையக மாண வர்களுக்குப் பெரும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பில் இ.தொ. காவின் இளைஞர் அணிப் பொதுச்செயலா ளர் ஜீவன் தொண்டமா னுக்கு அறிவிக்கப்பட்ட தையடுத்து, மாணவர்க ளுக்குத் தேவையான உதவிகளை அவர் வழங் குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளார்.

எனவே, யாழ்ப்பாணத்தி லுள்ள மலையக பல்க லைக்கழக மாணவர்கள் இளைஞர் அணிப் பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமான் 07111 88000, ரூபன் 0776256421 ஆகியோரின் தொலை பேசி இலக்கங்கள் ஊடா கவும், பொதுச் செயலா ளர் ஜீவன் தொண்டமா னின் முகநூல் பக்கத்தி லும் தகவல்களை வழங்க லாம் என்று அறிவிக்கப் பட்டுள்ளது. (க-44)

# பொருள்கள் எடுத்துவர 30 வாகனங்கள் கொழும்புக்கு

*மன்னார், மார்ச் 26*

மன்னாருக்கு அத்தியாவசியப் பொருள்கள் கொண்டுவரு வதற்காக முப்பது வாக னங்கள் தெற்கு நோக்கிச் சென்றுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா ஊரடங்கு சட்டத்தால் மன்னார் மாவட்டத்தில் அத்தி யாவசியப் பொருள்களுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவு கிறது. இதனை நிவர்த்தி செய்யும் வகையில் மன்னார் மாவட்டச் செயலர் சி.ஏ.மோகன்றாஸின் துரித நடவடிக்கையால் கொழும்பு செல்வதற்கு முப்பது வாகனங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் அனைத்துப் பகுதிகளிலும் உற்பத்தி செய்யப்படும் மீன், மரக்கறி, நெல் உட்பட அனைத்து உற்பத்திப் பொருள்களையும் வெளி யிடங்களுக்குக் கொண்டு செல்வதற்கும் வெளி மாவட்டங்களிலிருந்து மன்னார் மாவட்டத்துக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்களைக் கொண்டு வருவதற்கும் மன்னாரில் இருந்து முப்பது வாகனங்கள் நேற்று கொழும்புக்குச் சென்றுள்ளன என்று தெரி விக்கப்பட்டது. (த-213)

# கும்பாபிஷேகம் ஒத்திவைப்பு

*யாழ்ப்பாணம், மார்ச் 26*

யாழ்ப்பாணம் உடுவில் சிறி ஞானவைர வர் கோவில் கும்பாபிஷேகம் ஒத்திவைக் கப்பட்டுள்ளது என்று கோவில் நிர்வா கத்தினர் தெரிவித்துள்ளனர். நாட்டில் நிலவும் அசாதாரண சூழ்நிலையைக் கருத் திற் கொண்டே இந்த முடிவு எடுக்கப் பட்டுள்ளது. (த)

# கலாசார மண்டப பணிகள் நிறைவு

## நாடு திரும்பும் முயற்சியில் இந்தியத் தொழிலாளர்கள்

*யாழ்ப்பாணம், மார்ச் 26*

யாழ்ப்பாணம் மாநகர சபைக் காணியில் அமைக்கப்பட்ட கலாசார மண்டபத்தின் பணி கள் முழுமை பெற்றதால், அதனைக் கையளித்துவிட்டு நாடு திரும்பவுள்ளதாக இந்தி யத் தொழிலாளர்கள் தெரிவித் துள்ளனர். 100 கோடி (இந் திய)ரூபா செலவில் அமைக்கப்பட்ட 12 அடுக்கு மாடிக் கட்ட டம் அமைக்கும் பணி தற்போது முழுமையாக நிறைவடைந்துள்ளது.

நாட்டில் நிலவும் ஊர டங்குச் சட்டம் காரண மாக கட்டடத்தைக் கையளிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. எனினும் ஒப்பந்தத்தின் பிரகாரம் பணிகள் நிறைவுறுத்தப் பட்டு, மத்திய அரசிடம் கையளிக்கப்பட வேண் டும். அவ்வாறு கையளிக் கப்படும் கட்டடத்தை மாநகர சபையிடம் கை ளிப்பதாகவே ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. தற்போது நாட்டின் சூழ்நிலையில் நிர்வாக இயந்திரங்கள் இயங்கா மையால் பெரும் நெருக் கடி ஏற்பட்டுள்ளது.

இதனால் குறைந்த பட் சம் நேரடியாக மாநகர சபையிடமேனும் கட்ட டத்தைக் கையளித்து விட்டு வெளியேறுவதற்கு முடிவெடுத்துள்ளனர். அதற்கான அனுமதியைப் பெறும் முயற்சி யில் ஒப்பந்தகாரர் இறங்கியுள் ளார் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது. (க-105)

# திடீர் மனிதாபிமானி!



கொரோனா வைரஸ் பரவுவதைத் தடுக்கும் நோக்கில் பிறப்பிக்கப்பட்டு வரும் ஊரடங்குச் சட்டத்தால் மக்கள் பெரும் அவதிக்கு உள்ளாகியுள்ளனர். குறிப்பாக,அன்றாடம் உழைத்து உண்பவர்கள் அதிகம் பாதி க்கப்பட்டுள்ளனர். இதனால் உள்ளவர்கள் இல்லாதவர்களுக்குக் கொடுத்து உதவும் நிலை ஏற்பட்டுள்ளது. நாடு பூராகவும் நல்லுள்ளம் படைத்த மக்கள் முடியுமானவரை இந்த உதவியைச் செய்துதான் வருகிறார்கள்.

இந்த விடயத்தில் தானும் முன்னுதாரணமாகத் திகழ விரும்புகிறாராம் இராணுவத் தளபதி சவேந்திர சில்வா. கடந்த திங்கட்கிழமை ஊரடங்கு தற்காலிகமாக நீக்கப்பட்டபோது மக்கள் பொருட் களை கொள்வனவு செய்தனர். பலர் இல்லாதவர்களுக்குக் கொடுத்து உதவினர்.




அதுபோன்ற ஓர் உதவியை இராணுவத் தளபதி சவேந்திர சில்வாவும் செய்தாராம். பொருட்களை வாங்கிச் சென்று தனது வீட்டுக்கு அருகில் சில வீடுகளுக்குக் கொடுத்து உதவினாராம். அதுமாத்திர மன்றி இதுபோன்று நீங்களும் மற்றவர்களுக்கு உதவி செய்யுங்கள். இதுதான் இப்போதைய கட்டாயத் தேவை என்று கூறி எல்லோரை யும் ஊக்கப்படுத்தியும் வருகிறாராம். இந்தத் திடீர் மனிதாபிமானத்தை முள்ளிவாய்க்காலில் காட்டியிருக்கலாமே தளபதி???

# வீடு தேடி வரும் சேவை

## அரசு அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 26

நாட்டில் கொரோனா வைரஸ் (கொவிட் 19) பரவுவதை தவிர்ப்பதற்கு மக்களுக்கு அத்தியாவசிய உணவுப் பொருள்களை விநியோகிக்கும் பொறிமுறையொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கூட்டுறவு மற்றும் சிறப்பங்காடிகள் இணைந்து பிரதேச பொறிமுறையொன்றின் மூலம் நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதாக கொரோனா வைரஸை இலங்கையிலிருந்து ஒழிப்பதில் மக்கள் வாழ்க்கையை இயல்புநிலையில் பேணுவதற்காக தேவையான சேவைகளை தொடர்ச்சியாக வழங்குதல், நெறிப்படுத்தல் மற்றும் ஒருங்கிணைப்பை மேற்கொள்வதற்கான ஜனாதிபதி செயலணியின் தலைவர் பசில் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அனைத்து நடைமுறைகளும் கொரோனா ஒழிப்புக்கு சுகாதாரத் துறை முன்னெடுத்து வரும் நிகழ்ச்சித் திட்டத்துக்கு அமைவானதாக இருக்க வேண்டும். மக்கள் வாழ்க்கை பாதிக்கப்படாத வகையில் அத்தியாவசிய சேவைகளை பேணுவது முக்கியமானதாகும். விவசாயிகள், தேசிய பொருளாதாரத்தை பாதுகாக்கும் வகையில் நாட்டில் உற்பத்தி செய்யப்படும் உணவுப் பொருள்களை மக்களுக்கு பகிர்ந்தளிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று அனைத்து மாவட்ட செயலாளர்கள், வங்கித் தலைவர்கள், அத்தியாவசிய உணவுப் பொருள்களுடன் தொடர்புபட்ட அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் அதிகாரிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது பல்வேறு தீர்மானங்களை மேற்கொண்டதாக பசில் குறிப்பிட்டார்.

அரிசி, தேங்காய், மரக்கறி, முட்டை, கோழி இறைச்சி போன்றவற்றை தட்டுப்பாடின்றி வழங்கக் கூடிய நிலை உள்ளது. இவற்றை விவசாயிகள் மற்றும் உற்பத்தியாளர்களிடமிருந்து உரிய முறையில் கொள்வனவு செய்து கூட்டுறவு மற்றும் சிறப்பங்காடி விற்பனை நிலையங்களுடன் இணைந்து அத்தியாவசிய உணவுப் பொதியைத் தயார் செய்து பிரதேச பொறிமுறையின் மூலம் முறையாக பகிர்ந்தளிக்க முடியும் என்று பசில் ராஜபக் ஷ சுட்டிக்காட்டினார். அவற்றை அந்தந்த மக்கள் பிரிவினர் எதிர்பார்க்கும் வகையில் பல்வேறு விலைகளில் தயாரித்து வழங்க முடியும். இந்த நடைமுறையை நெறிப்படுத்துவதற்கு இடர் முகாமைத்துவ மத்திய நிலையத்தின் உதவியும் பெறப்படும்.

மருத்துவமனைகளில் பதிவுசெய்து தொடர்ச்சியாக மருந்துகளை கொள்வனவு செய்யும் நோயாளிகளுக்கு உரிய மருந்து பட்டியல்களின் படி வீடுகளுக்கே மருந்துகளை விநியோகிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. பிரதேச செயலாளர்கள், பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மற்றும் பாதுகாப்புத் துறையின் பங்களிப்பு இதற்கு பெற்றுக்கொள்ளப்படும்.

தனியார் மருந்தகங்களில் மருந்துகளை கொள்வனவு செய்யும் நோயாளிகளுக்கு பிரதேசத்தில் தெரிவுசெய்த சில மருந்தகங்களின் மூலம் வீடுகளுக்கே பகிர்ந்தளிக்கும் முறைமையொன்றை பின்பற்றுவது குறித்தும் கலந்துரையாடப்பட்டது. வர்த்தக மற்றும் அத்தியாவசிய நடவடிக்கைகளுக்கு பங்களிக்கும் வகையில் வர்த்தக வங்கிகளை திறந்து வைக்க நடவடிக்கை எடுக்குமாறும் அவற்றின் தலைவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

தொலைபேசி ஓடர்கள் மூலம் வீடுகளுக்கே எரிவாயுவை விநியோகிக்கும் நிகழ்ச்சித்திட்டமொன்றையும் உடனடியாக நடைமுறைப்படுத்துமாறு பசில் அந்நிறுவனங்களிடம் கேட்டுக்கொண்டுள்ளார். முழு திட்டத்தி னதும் நோக்கம் மக்கள் ஒன்றுகூடுவதை தவிர்த்து கொரோனா வைரஸ் ஒழிப்புக்கு சுகாதார துறை முன்னெடுத்துள்ள நிகழ்ச்சித்திட்டத்தை வெற்றிபெறச் செய்வதாகும்.

பகிர்ந்தளிக்கும் நடவடிக்கைக்கு பிரதேச செயலாளர்கள், கிராம அலுவலர்கள், விவசாய ஆராய்ச்சி அதிகாரிகள், சமுர்த்தி அபிவிருத்தி அதிகாரிகளின் பங்களிப்பு பெறப்படும். தற்போது பல்வேறு நாடுகளின் முழுமையான ஏற்றுமதி இறக்குமதி நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டுள்ளன. உருவாகியுள்ள நிலைமையை கருத்திற் கொண்டு அதிக கவனம் செலுத்தி நிலையான உற்பத்தி பொருளாதாரத்தை நாட்டில் கட்டியெழுப்புவது குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டது.

விவசாய மற்றும் மீன்பிடி நடவடிக்கைகளை தடையின்றி மேற்கொள்வதற்கு தேவையான வசதிகளை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மரக்கறி, நெல், சோளம், உழுந்து, பாசிப் பயறு, கௌபி, குரக்கன் பயிரிடுவதற்கு விவசாயிகளை வலுவூட்டுமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. (ஓ,5)



# கொரோனாப் பெருந்தொற்றை கணித்தாராம் மைக்கல் ஜக்சன்

வொஷிங்டன், மார்ச் 26

கொரோனா போன்ற பெருந்தொற்றை மைக்கேல் ஜக்சன் கணித்திருந்தார் என்று அவரின் முன்னாள் மெய்க்காப்பாளர் தகவல் தெரிவித்துள்ளார்.

பிரபல பாப் பாடகர் மைக்கேல் ஜக்சனிடம் 10 ஆண்டுகளுக்கும் மேலாக மெய்க் காவலராக இருந்தவர் மேட் பிட்டஸ். அவர் மைக்கேல் ஜக்சனுக்கு கொரோனா போன்ற பெருந்தொற்று நோய் குறித்த ஊகம் இருந்ததாகத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக 'தி சன்' நாளிதழுக்கு அவர் அளித்துள்ள பேட்டியில், 'இயற்கைப் பேரழிவு வரும் என்பதை மைக்கேல் ஜக்சன் உணர்ந்திருந்தார். மக்கள் அனைவரும் கொத்துக் கொத்தாக இறக்க வேண்டிய சூழல் எப்போது வேண்டுமானாலும் ஏற்படலாம் என்றும் ஒற்றைக் கிருமி உலகம் முழுக்கப் பரவும் என்றும் அவர் கணித்திருந்தார். அவர் பல்வேறு நாடுகளுக்குத் தொடர்ந்து பயணித்து வந்தார். மேற்குறிப்பிட்ட காரணங்களாலேயே அவர் மாஸ்க்கை அணிந்து வந்தார். பல்வேறு தரப்பினரால் கேலிக்குள்ளானபோதும் அவர் அதை விடவில்லை.

'நான் உடல்நிலை சரியில்லாமல் படுத்து, ரசிகர்களை வருத்தப்பட வைத்துவிடக் கூடாது. நான் ஏதோ ஒரு காரணத்துக்காகத்தான் பூமியில் பிறந்திருக்கிறேன். நான் ஆரோக்கியத்துடன் இருந்தாக வேண்டும்' என்று மைக்கல் அடிக்கடி கூறுவார். அவர் அப்போது அச்சப்பட்டது இப்போது நடந்துவிட்டது என்று நினைக்கிறேன்' என மேட் தெரிவித்துள்ளார். (ம)

# இளைஞர்களுக்கு அதிகம் பாதிப்பு!

## பாகிஸ்தானின் நிலை இது

பாகிஸ்தானில் கொரோனா பாதிப்பு ஏற்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் இளைஞர்கள் என்று அந்த நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

பாகிஸ்தானில் கோவிட்19 பாதிப்புக்கு இதுவரை 1,093 பேர் பாதிக்கப்பட்டுள்ளர். 8 பேர் பலியாகியுள்ளனர். பாகிஸ்தானின் சிந்து மாகாணத்தில் கோவிட் 19 காய்ச்சலால் மக்கள் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர். இங்கு மட்டும் சுமார் 400க்கும் அதிகமானவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த நிலையில் பாகிஸ்தானில் கோவிட்19 காய்ச்சலால் பாதிக்கப்பட்ட 1000 பேரில் பெரும்பாலானவர்கள் இளைஞர்கள். அவர்கள் அனைவரும் 21 வயது முதல் 30 வயதுக்கு உட்பட்டவர்கள் என்று அந்த நாட்டு அரசு தெரிவித்துள்ளது. (ம)

# வடமராட்சி கிழக்கில் ஊரடங்கால் பாதித்த பலருக்கும் உதவிகள்

மருதங்கேணி, மார்ச் 26

ஊரடங்கு உத்தரவால் நாளாந்த தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், வடமராட்சி கிழக்கில் இவ்வாறு பாதிக்கப்பட்டவர்களுக்கு உலர் உணவுகள் வழங்கப்பட்டன. யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தால் வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பகுதிகளிலுள்ள மிக வறிய மக்களுக்கு அவை வழங்கப்பட்டன. இதேவேளை நேற்றிலிருந்து உணவின்றி இருந்த குடாரப்பு பகுதியை சேர்ந்த இரண்டு குடும்பங்களுக்கும் பணம் இருந்தும் நேற்று உணவுப் பொருள்களைப் பெற்றுக் கொள்ள முடியாமல் இருந்த ஐந்து குடும்பங்களுக்கும் பருத்தித்துறை பிரதேச சபை உறுப்பினர் வே.பிரசாந்தனும் தனியார் நிறுவனத்தினரும் பொருள்களை நேற்று வழங்கினர். (த-160)

இப்பத்திரிகை, யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அருண் பிறிண்டேர்ஸால் 26.03.2020 ஆம் திகதி வெளியிடப்பெற்றது.